ISSN - 2235-9796

16 பக்கங்கள் 30/-

# Valai வலை


சமகால பொது அறிவுத் தொகுப்பு

உண்மை
நேர்மை
நம்பிக்கையே
உயர்ச்சி தரும்


சிலந்தி - 03 யூன் - 2014 இழை - 33




உதைபந்தாட்டம் 12



சுரேஷ் ரெய்னா 08




இளைஞர் மாநாடு 13

**வாசக நெஞ்சங்களுக்கு...!**

வலையின் இதழ் 33 ஆவது இழையில், உங்களைச் சந்திப்பதில் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். எப்படி சௌக்கிய மாக இருக்கிறீர்களா?

உண்மையான அப்பழுக்கற்ற அன்பானது மனித சமுதா யத்தில் இன்னமும் இருந்து வருகிறது என்பது நிதர்சனமான உண்மை. யுகங்கள் மறைந்தாலும், நாகரிகங்கள் மாறினாலும் அன்பு போன்ற சில அடிப்படை மனித உணர்வுகள் அழிவதில்லை. தாய்-பிள்ளை, சகோதரன்-சகோதரி, கணவன்-மனைவி, ஆசிரியர் - மாணவர், வலியோர்-ஏழை, மருத்துவர் - நோயாளர்கள் ஆகியோருக்கு இடையிலான அன்பு என அவற்றினை அடுக்கிக் கொண்டு போகலாம்.

எனவே முழுமை பெற்ற அன்பு உருவாகாதவிடத்து அதன் அடிப்படையில் தோன்றக்கூடியதான இரக்கம் வெளிப் படுவதற்கு சாத்தியக்கூறுகள் ஏதுமில்லை. ஆகவே இத்துணை ஆரவாரத்திற்கு மத்தியிலும் தோன்றுகின்ற இந்த இரக்கம் என்கிற தூய உணர்வு இல்லையென்றால் மனிதர்கள் யாருக்கும் பூமிதன்னில், கிட்டத்தட்ட அரக்கர்கள் போல் உலா வரவேண்டிய துதான்.

அன்பிற்கும் இரக்கத்துக்கும் இடையிலான உறவானது, தாளிக்கும் வெண்ணெய்க்கும் இடையிலான உறவினைப் போன்றதாகும். ஆகவேதான் 'அன்பெனப்ப தொன்றின் தன்மை அமரரும் அறிந்ததென்றால்..' என்று கவிச்சக்கரவர்த்தி கம்பரும், 'அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்..' என வள்ளுவரும் அன்பின் மாட்சிமை பற்றி விளக்கியுள்ளனர்.

எனவே இரக்கம் விளைவிக்கும் அந்த அன்பை நம் வாழ்வில் கடைப்பிடிப்போம். நலம் பல பெற்று அன்பு செலுத்தி வாழ்ந்திடுவோம். இந்த இதழ் தொடர்ந்து வெளி வருவது உங்கள் கைகளிலேயே தங்கியுள்ளது.

எனவே உங்கள் ஆதரவில் எனது பணி தொடரும்...


நன்றி.

- 'வலை' வீசல் தொடரும்...

**சி.என்.எச்.சாள்ஸ்**
தொகுப்பாசிரியர்

## இம்மாத சர்வதேச தினங்கள்...

- ✧ யூன் - 01 - உலக குழந்தைகள் தினம்
- ✧ யூன் - 04 - உலக இளம் குழந்தைகள் தினம் / தாக்குதலுக்குப் பலியான உலக பஞ்சிளம் குழந்தைகள் தினம்
- ✧ யூன் - 05 - உலக சுற்றுச் சூழல் தினம்
  இவ்வருட தொனிப்பொருள் : சுற்றாடல் எம்மைக் காக்கும் நாம் சுற்றாடலைக் காப்போம்.
- ✧ யூன் - 07 - உலக தொல்பொருளியலாளர் தினம்




- ✧ யூன் - 08 - உலக சமுத்திர தினம்
- ✧ யூன் - 09 - உலக அங்கீகார தினம்
- ✧ யூன் - 10 - குமிழ்முனை பேனா தினம்
- ✧ யூன் - 12 - உலக சிறுவர் தொழிலாளருக்கு எதிரான தினம்
- ✧ யூன் - 14 - உலக குருதிக்கொடையாளர் தினம் (2014 கருப்பொருள்: 'தாய்மாரைப் பாதுகாப்பதற்காக பாதுகாப்பான இரத்தம்'
- ✧ யூன் - 16 - உலக தந்தையர் தினம்
- ✧ யூன் - 18 - உலக நெல்சன் மண்டேலா தினம் (ஐ.நா.அறிவிப்பு)
- ✧ யூன் - 20 - உலக அகதிகள் தினம்
- ✧ யூன் - 21 - உலக இசை தினம்
- ✧ யூன் - 23 - உலக இறை வணக்க தினம்
- ✧ யூன் - 26 - உலக போதை ஒழிப்பு தினம், நல்லெழுக்க தினம்
- ✧ யூன் - 27 - உலக நீரழிவாளர் தினம்
- ✧ யூன் - 29 - உலக புள்ளியியல் தினம்
- ✧ யூன் - 28 - உலக ஏழைகள் தினம்

## இலங்கை பற்றிய இம்மாத வலை வீசலில்...

❒ யாழ்.மாவட்டத்தில் காலநிலைக்கு ஏற்றதாக தெரியப்பட்டுள்ள எள்ளு இனம் எது?
'உமா'

❒ தலசீமியா நோயாளர்கள் இலங்கையில் எப்பகுதியில் உள்ளனர்?
மட்டக்களப்பில் (120 பேர் இருப்பதாக இனங்காணப்பட்டுள்ளனர்)

❒ 2014 ஆம் ஆண்டுக்கான சுற்றாடல் செயற்பாட்டுச் சுட்டியில் இலங்கை எத்தனையாவது இடத்தைப் பெற்றுள்ளது?
69 ஆவது, இதேவேளை இந்தியா 155 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

❒ ஜப்பானுக்கும், இலங்கைக்கும் இடையிலான நட்புறவின் வெளிப்பாடாக ஜப்பான் அரசு அண்மையில் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கிய பொருள் எது?
இலங்கை இராணுவத்தின் பாவணைக்கு **'தீயணைப்பு வாகனம்'** வழங்கியுள்ளது.

❒ இலங்கையில் தூக்குத் தண்டனை நிறைவேற்றுகின்றவரை இதுவரை காலமும் அழைக்கப்பட்டு வந்த **'அலுக்கோசு'** என்ற பெயர் தற்போது மாற்றப்பட்டுள்ளது. அப்பெயர் யாது?
**'உயிர் எடுப்பவர்' (ஜீவஹரண)**

❒ சர்வதேச ரீதியில் காப்புறுதிச் சேவைகளை வழங்குவதில் புகழ்பெற்ற நிறுவனம் இலங்கையிலிருந்து வெளியேறுவதாக அறிவித்துள்ளது. அந்த நிறுவனம் எது?
**AIG**

❒ சர்வதேச உதைபந்தாட்டச் சம்மேளனம் இலங்கைக்கு வழங்கும் வருடாந்த நிதியுதவிக்கு மேலதிகமாக வழங்கவுள்ள நிதி எவ்வளவு?
**1000 இலட்சம்**

❒ இலங்கையில் கால்நடைகளுக்கு 'கால்வாய்' தீவிரமடைந்ததையடுத்து அதனைக் கட்டுப்படுத்துவதற்கான தடுப்பூசி எந்த நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன? (மேலதிக விபரம் 15 ஆம் பக்கத்தில்....)
**பிரான்ஸ்**

❒ வடபகுதி மக்களுக்கு வீடுகளை நிர்மாணிக்க அண்மையில் 120 மில்லியன் ரூபாவினை வழங்குவதற்கு முன்வந்துள்ள நாடு எது?
**பாகிஸ்தான்**

❒ 'மொனோ' ரயில்வே திட்டம் என்பது யாது?
நகரில் அதிகரிக்கும் வாகன நெரிசலைக் குறைக்கும் நோக்குடன் மொரட்டுவை முதல் தலிங்கமை வரையிலாக ஆரம்பிக்கப்படவுள்ள திட்டமே இதுவாகும்.

❒ இலங்கையின் எப்பகுதியில் ஒடு பாதையுடனான விமானத் தளம் அமைக்கப்பட்டு வருகிறது?
**கண்டி திகன பிரதேசத்தில்**

////////////////////////////////////////////////////////////////////////

❒ மட்டக்களப்பு மாவட்டத்தில் அண்மையில் அகால மரணமடைந்த கராட்டிக் கலை நிபுணர் யார்?
**சிகான் கே.இராமச்சந்திரன்**

❒ இலங்கையின் முதலாவது என்புமச்சை மாற்றீட்டு சிகிச்சைப் பிரிவு இலங்கையில் எந்த வைத்தியசாலையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது?
**சென்ரல் வைத்தியசாலை (கொழும்பு)**

❒ இந்த மாத பிற்பகுதியில் (2014 யூன், 26) ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் எந்த நாட்டுக்குப் பயணமானார்?
மாலைதீவு (அதனைத் தொடர்ந்து சீஷெல்ஸ் நாட்டுக்கும் பயணமானார்)

## இலங்கையில் இன்று இவர்கள்...

⌖ இலங்கையில் உதைபந்தாட்டக் கழகத்தின் தலைவர் யார்?
**ரன்ஜித் ரொட்ரிகோ**

⌖ சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் யார்?
**சந்திரசிறி கஜதீர**

⌖ இந்தியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?
பேராசிரியர் சுதர்ஷன் செனவிரத்ன

## உலகை நோக்கிய இம்மாத வலை வீசலில்...

◈ பிரசித்தி பெற்ற இலத்திரனியல் நிறுவனம் ஒன்று டெக்காஸிலுள்ள தமது தொழிற்சாலையை மூடியுள்ளது. அந்த நிறுவனம் எது?
மோட்டோ றோலா

◈ அமெரிக்காவில் மிகக் குறைந்த வயதில் பள்ளிக் கல்வியை முடித்து டிப்ளோமா பெற்றவர் என்ற சாதனையை அண்மையில் படைத்த இந்தியச் சிறுவன் யார்?
**தனிஷ்க் ஆப்ரகாம்**

◈ ஜி-77 நாடுகளின் உச்சி மாநாடு இம்முறை எந்த நாட்டில் நடைபெற்றது?
பொலிவியாவில் (ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களும் பங்குபற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது)

- குழந்தைகளைச் சரிவரக் கவனிக்காத பெற்றோருக்கு இரண்டு வருட சிறைத்தண்டனையை வழங்கி வரும் நாடு எது?
**பிரிட்டன்**

- இந்த ஆண்டுக்கான (2014) உணவுப் பரிசு யாருக்கு வழங்கப்பட்டது?
**மருத்துவர் சஞ்சய ராஜாராம்**

- உலகப் புகழ்பெற்ற இணையத்தளமான கூகுள் நிறுவனம் எந்த நாட்டில் இயங்கி வருகிறது?
**அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில்..**

- நாட்டின் பொருளாதார முன்னேற்றத்துக்காக தனது சொத்தின் அரைவாசிப் பகுதி மற்றும் தனது சம்பளத்தின் பாதியையும் வழங்குவதாக அறிவித் துள்ள எகிப்து நாட்டு ஜனாதிபதி யார்?
**அப்தல் பட்டா எல் சிசி**

- தனது நாட்டுப் பிரஜை ஒருவர் பாகிஸ்தானின் பெஷாவர் விமான நிலை யத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் கொல்லப்பட்டதை அடுத்து அந்நாட்டுக் கான விமான சேவையை நிறுத்துவதற்கு தீர்மானித்துள்ள நாடு எது?
**சவூதி அரேபியா**

- நம்பிக்கையில்லா வாக்கெடுப்பில் அண்மையில் வெற்றி பெற்றுள்ள போலந்து நாட்டின் பிரதமர் யார்?
**டொனால்ட் டஸ்க்**

- தேசிய கீதத்துக்கு எழுந்து நின்று மரியாதை செலுத்தாதுவிட்டால் ஒரு வருட சிறைத்தண்டனையும், அபராதத் தொகையும் செலுத்த வேண்டு மென அறிவித்துள்ள நாடு எது? **எகிப்து**

- ஜி-7 நாடுகள் ஒன்றிணைந்து எந்த நாட்டுக்கு எதிராக பொருளாதாரத் தடைகளை விதிப்பதற்குத் தீர்மானித்துள்ளன?
ரஷ்யா

- உலக இரத்த நன்கொடையாளர் தின சர்வதேச மாநாடு இம்முறை எங்கே நடைபெற்றது?
**கொழும்பில்**
இதேவேளை இரத்ததானம் வழங்கும் முதன்மை நாடுகளில் இலங்கையும் ஒன்றெனெ அறிவிக்கப்பட்டுள்ளது.

//////////////////////////////////////////////////////

- ◇ ஆண்டுகளுக்கு கட்டாய இராணுவப் பயிற்சியை தற்சமயம் அறிமுகப்படுத்தியுள்ள நாடு எது?
  **ஐக்கிய அரபு இராச்சியம்**

- ◇ சமூக வலைத் தளங்களான டுவிட்டர் மற்றும் பேஸ்புக்கில் இணைந்துள்ள உளவு அமைப்பு எது?
  **அமெரிக்க இளவு அமைப்பான சி.ஐ.ஏ**

- ◇ கடந்த 2014 மார்ச் மாதம் 8 ஆம் திகதி காணாமற்போன மலேசிய விமானமான எம்.எச்.370 எங்கிருந்து எங்கு நோக்கிப் புறப்பட்டது?
  **கோலாலம்பூர் நகரிலிருந்து பீஜிங் நோக்கிப் புறப்பட்டது.**

- ◇ இறக்கை ஆடை அணிந்து, ஒட்சிசன் உபகரணத்தைப் பயன்படுத்தாது 80 ஆயிரம் மீற்றர் உயரத்திலிருந்து குறித்து சாதனை படைத்த வீரர் யார்?
  ரெமோ லாங் (சுவிடசர்லாந்து - வயது-38)

- ◇ உலகின் வயதான ஆண் என கின்னஸ் சாதனை படைத்தவர் யார்?
  **அலெக்ஸ்சாண்டர் இமிச் (வயது-11) அமெரிக்கா**

- ◇ இலங்கைக்கு விஞ்ஞான தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக (ஒரு மில்லியன்) நிதியுதவி வழங்க முன்வந்துள்ள நாடு எது?
  **சீனா**

- ◇ எரிவாயுக்கான நிலுவைக் கட்டணத்தை நிர்ணயிக்கப்பட்ட கால எல்லைக்குள் செலுத்தாததன் காரணத்தினால் அதன் விநியோகத்தினை நிறுத்தியுள்ள நாடு எது?
  ரஷ்யா

## உலகின் இன்றைய நிலையில் இவர்கள்...

- ◎ சிரியாவின் புதிய ஜனாதிபதி யார்?
  **பஷார் அல் அசாத்** (இவர் மூன்றாவது முறையாகவும் வெற்றியீட்டியுள்ளார்)

- ◎ இஸ்ரேலின் புதிய ஜனாதிபதி யார்?
  ரெயுவென் றிவ்லின்

- ◎ சீன நாட்டின் பிரதமர் யார்? **லீ கியூயாங்**

◎ கொலம்பிய நாட்டின் புதிய ஜனாதிபதி யார்?
**ஜுவான் மெனுவல் சாண்டோஸ்** (இவர் இரண்டாவது முறையாகவும் வெற்றி பெற்றுள்ளார்)

◎ ஸ்பெயின் நாட்டின் புதிய அரசர் யார்? **பிலிப்பே**

◎ எகிப்து நாட்டின் புதிய ஜனாதிபதி யார்?
**அப்தல் பித்தாஹ் அல்சிசி** (முன்னாள் இராணுவத் தளபதி)

◎ சர்வதேச உதைபந்தாட்ட சம்மேளனத் தலைவர் யார்?
**ஜோசப் செப் பிலெட்டா**

◎ பூட்டான் நாட்டின் பிரதமர் யார்? **டிசெரிங் டோப்கே**

◎ நமீபிய நாட்டின் பிரதமர் யார்? **ஹகோ ஜின்கோப்**

◎ பொலிவியா நாட்டின் ஜனாதிபதி யார்?
**ஈவோ மொரல்ஸ்**

◎ ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளவர் யார்?
**ஜோர்தான் இளவரசர் செயித் அல் ஹுசைன்**

◎ மாலைதீவு நாட்டின் ஜனாதிபதி யார்?
**அப்துல்லாஹ் யாமின்**

◎ ஈராக் நாட்டின் பிரதமர் யார்?
**நூரி அல் மலிக்கி**

◎ சிஷெல்ஸ் நாட்டின் ஜனாதிபதி யார்?
**ஜேம்ஸ் மிச்சேல்**

## விளையாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

⊙ ஐ.பி.எல் அனைத்து தொடர்களிலும் சராசரியாக 400 ஓட்டங்களுக்கு மேல் எடுத்த ஒரே வீரர் என்ற சாதனையைப் படைத்த சென்னை சுப்பர் கிங்ஸ் வீரர் யார்?
**சுரேஷ் ரெய்னா**

⊙ தென்னாபிரிக்காவின் கிரிக்கெட் நிர்வாகம் இவ்வாண்டு நடத்திய கிரிக்கெட் வீரர் விருது வழங்கும் விழாவில் சிறந்த வீரர் விருது கிடைக்கப்பெற்ற வீரர் யார்?
டி வில்லியர்ஸ்

⊙ பிரெஞ் ஓபன் ரென்னிஸ் போட்டியின் மகளிர் ஒற்றையர் பிரிவுக்கான இறுதிப் போட்டியில் வெற்றி பெற்று பட்டம் வென்ற வீராங்கனை யார்?
ஷரபோவா

⊙ சர்வதேச கிரிக்கெட் சபையின் புதிய தலைவர் யார்?
ஸ்ரீனிவாசன்
இவர் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முன்னாள் தலைவராவார்.

⊙ கலிபோர்னியாவில் நடைபெற்ற 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் எட்டு மாதக் கர்ப்பிணி ஒருவர் ஓடிச் சாதனை படைத்தார். அவர் யார்?
அலிசியா மோண்ட் டானோ (அமெரிக்கா)

⊙ ஒரு நாள் கிரிக்கெட் ஆட்டத்தில் சிறந்து விளங்கும் அணிகளின் தர வரிசைப் பட்டியலில் இலங்கை எத்தனையாவது இடத்தில் உள்ளது?
இரண்டாவது, இதேவேளை, முதலாவது அவுஸ்ரேலியா, இரண்டாவது இந்தியா ஆகும்.

⊙ பிரெஞ் பகிரங்க ரென்னிஸ் போட்டித் தொடரின் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டத்தில் 9 ஆவது முறையாக பட்டம் வென்று சாதனை படைத்த வீரர் யார்?
ரபேல் நடால்

⊙ அவுஸ்ரேலியா கிரிக்கெட் அணியின் பயிற்சி ஆலோசகராக நியமிக்கப் பட்ட இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் யார்?
முத்தையா முரளிதரன்

⊙ பெண்கள் கரப்பந்தாட்டப் போட்டியைப் பார்க்க தடை விதிக்கப்பட்ட நாடு எது?
ஈரான்

⊙ டெஸ்ட் போட்டியில் 7 இன்னிங்ஸ்களில் தொடர்ச்சியாக 50 ஓட்டங்களுக்கு மேல் பெற்ற நான்காவது வீரர் என்ற சாதனையை நிகழ்த்திய இலங்கை கிரிக்கெட் வீரர் யார்?
குமார் சங்கக்கார

## விருதுகள் பக்கம் வீசிய வலையில்...

❖ சமாதானத்துக்கும், ஜனநாயகத்துக்கும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்கள் வழங்கிய பங்களிப்புக்காக அவருக்கு அண்மையில் உயர்விருது வழங்கிக் கௌரவித்த நாடு எது? அந்த விருதின் பெயர் என்ன?
பொலிவியா, 'புலோரி நெஷனல்' விருது

## அயல் நாட்டுப் பக்கம் நோக்கிய வலை வீசலில்...

※ இந்திய இளம் தூதராகத் தெரிவு செய்யப்பட்ட தமிழகச் சிறுவன் யார்? **ஸ்ரேநிக் காந்தி**

※ இந்தியாவின் முதலாவது விமானம் தாங்கிக் கப்பல் எது?
**ஐ.என்.எஸ். விக்கிரமாதித்தியா**

※ பிரதமராகப் பதவியேற்றுக்கொண்ட பின்னர் நரேந்திர மோடி முதன் முதலாக எந்த நாட்டுக்குப் பயணமானார்?
**பூட்டான்**

※ இந்தியாவில் புதிதாக உருவாகிய ஒன்பதாவது மாநிலம் எது?
**தெலுங்கானா** (01.06.2014 இல் உதயமாகியது)
இதேவேளை, தெலுங்கானா மாநிலத்தின் முதல் மந்திரி சந்திரசேகரராவ் ஆவார்.

※ இந்தியாவில் அண்மையில் கார் விபத்தில் பலியாகிய மத்திய அமைச்சர் யார்? **கோபிநாத் முண்டே**

※ ஒரே நாளில் 510 எம்.பிக்கள் பதவி வகித்து சாதனை நிகழ்த்தியது எந்த நாட்டில்?
**இந்தியா**

※ இந்தியாவின் இரண்டாவது பெண் சபாநாயகராகப் பதவியேற்றுக் கொண்டவர் யார்?
**சுமித்ரா மகாஜன்**

※ அமெரிக்காவில் 10 வயதில் டிப்ளோமா முடித்து சாதனை படைத்த இந்தியச் சிறுவன் யார்?
**தனிஷ்க் ஆபிரகாம்**

※ தென்னிந்தியாவில் அண்மையில் காலமாகிய திரைப்பட இயக்குநர் யார்?
இராம நாராயணன்

## நான் கேட்டவை, அறிந்தவை, படித்தவை உங்களுக்காக...

⌗ இலங்கையின் மகளிர் அபிவிருத்திக்காகத் தம்மை அர்ப்பணித்த முதல் பெண்மணி யார்?
விவியன் குணவர்த்தனா

⌗ சிங்கள மொழித்துறைக்கு அளப்பரிய சேவையாற்றியவர் யார்?
பேராசிரியர் எதிரிவீர சரத்சந்திர

⌗ இலங்கையில் நுகர்வோரைப் பாதுகாக்கும் சட்டம் எது?
1979 ஆம் ஆண்டின் நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்

⌗ இலங்கையில் பலநோக்குத் திட்டங்களை உருவாக்கியவர் யார்?
டி.எஸ்.சேனநாயக்க

⌗ இலங்கையில் கைப்பணிப் பொருட்கள் தயாரிக்கும் நிறுவனம் எது?
'லக்சல' நிறுவனம்

⌗ இலங்கையில் தோல் பதனிடும் தொழிற்சாலை அமைந்துள்ள இடம் எது?
மட்டக்குழி

⌗ உலகில் அதிகமாக தங்கம் உற்பத்தி செய்யப்படும் நாது எது?
தென்னாபிரிக்கா

⌗ இலங்கையிலுள்ள உள்ளூராட்சிச் சபைகளின் மொத்த எண்ணிக்கை யாது?
330
- மாநகர சபை - 18
- நகர சபை - 42
- பிரதேச சபை - 270

⌗ வெடித்துச் சிதறி விஞ்ஞானிகளைப் பலிகொண்ட அமெரிக்க விண்கலத்தின் பெயர் என்ன? கொலம்பியா

⌗ உலகத்தில் சனத்தொகை கூடிய நகரம் எது?
டோக்கியோ

⌖ உலகில் முஸ்லிம்கள் அதிகமாகக் காணப்படும் நாடு எது?
இந்தோனேசியா

⌖ இலங்கையின் பெரிய நிர்வாக மாவட்டம் எது?
அநுராதபுரம்

⌖ நீரிழிவு நோய் எந்த உறுப்பு பாதிக்கப்படுவதனால் ஏற்படுகிறது?
சதையி

⌖ பப்பாளிப் பழத்தின் தாயகம் எது?
மெக்சிக்கோ

⌖ அமெரிக்க நாட்டின் முதலாவது ஜனாதிபதி யார்?
ஜோச்ச் வோஷிங்ரன்

⌖ லிபியா எந்தக் கண்டத்தில் அமைந்துள்ளது?
ஆபிரிக்கா

⌖ வங்களாதேசம் எந்த ஆண்டில் பாகிஸ்தானிலிருந்து பிரிந்து தனிநாடானது?
*1971*

⌖ இந்துக்களின் புனிதத் தலமான கதிர்காம முருகன் ஆலயம் எந்த மாவட்டத்தில் அமைந்துள்ளது?
அம்பாந்தோட்டை

⌖ சுற்றாடல் சுகாதாரத்தில் அடங்குபவை எவை?
- வளியின் தரம்
- நீர்
- மலசலகூட வசதிகள்
- நீர்வளம்
- விவசாயம்
- வன வளம்
- கடற்றொழில்
- உயிரியல் பல்லினத்தன்மை
- காலநிலை
- எரிசக்தி

⌖ முதலாம் இராஜசிங்கனின் இளமைப் பெயர் எது?
டிகிரி பண்டார

## உலகக் கிண்ண உதைபந்தாட்டம் – பிரேசில் – 2014

**(வலை வீசி தேடி எடுத்த தகவல்கள்...)**

- 12.06.2014 ஆம் திகதி பிரேசிலில் நடைபெற்றது.
- பிரேசில் எந்தக் கண்டத்தில் அமைந்துள்ளது?
  **தென்னாபிரிக்கா கண்டம்**
- உலகக் கிண்ண கால்பந்து 1930 இல் அறிமுகம் செய்யப்பட்டது. இது நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது.
- பிரேசிலை எதிர்த்து குரோசியா மோதியது.
- பிரேசில் ஜனாதிபதி - **டில்மா ரோசெப்**
- உலகக்கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் கிண்ணத்தை வெல்லும் அணிக்கு வழங்கப்படவுள்ள பணத்தொகை எவ்வளவு?
  210 கோடி (இந்திய நாணய மதிப்பில்)
- உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்கேற்கும் நாடுகளின் கொடிகளை தமது நாட்டில் பறக்கவிடுவதற்குத் தடை விதித்துள்ள நாடு எது?
  **பங்களாதேஷ்,** தமது நாட்டு தேசியக் கொடியை மதிக்காத வகையில் இந்த செயற்பாடு அமைவதாகக் கருதியே இந்த முடிவினை எடுத்தது.
- உதைபந்தாட்டப் பந்துகள் இம்முறை முதன் முதலாக பாகிஸ்தானில் தயாரிக்கப்பட்டன.
- உலகக் கிண்ணப் போட்டியில் பயன்படுத்தப்படும் பந்துக்கு ரசிகர்கள் இட்ட பெயர் யாது?
  **'பிரசுகா'**
- பந்தின் எடை - 437 **கிராம்**
- பிரேசிலில் நடைபெற்ற உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் முதன் முறையாக உதைபந்தாட்டச் சம்மேளனம் (பி்.பா) அறிமுகப்படுத்திய தொழில்நுட்பம் யாது? **கோல் வைன்**
- உலகக் கிண்ண தொடக்கவிழாப் பாடல் யாது?
  **'ஓலே ஓலா'** (வீ ஆர் ஒன்)
  இப்பாடலைப் பாடியவர் **ஜெனிபர் லோபஸ்** ஆவார். இவர் அமெரிக்கப் பாடகியும், நடிகையுமாவார்.
- 84 ஆண்டு கால உலகக் கிண்ண உதைபந்தாட்ட வரலாற்றில் அதிக வயதில் பங்கேற்றவர் என்ற பெருமையைப் பெற்ற வீரர் யார்?
  **பாரிட் மோன்ட்டிரகன்** (வயது-43, கொலம்பியா) (ஜப்பானுக்கு எதிரான உதைபந்தாட்டத்தில்)

- உதைபந்தாட்ட வீரர்களை உற்சாகப்படுத்த பி∴பா அறிவித்துள்ள அதிகார பூர்வமான இசைக்கருவி எது?
  **'கேக்ஸிரோலா'**
  இது அளவான சத்தத்தை எழுப்பும் கேக்ஸிரோவினுள் விதைகள் அடைக்கப்பட்டுள்ளன.
  இதனை அசைக்கும் போது சல சலவென கடல் அலைகளைப் போல் சத்தம் உண்டாகும் எனக் கூறப்படுகிறது.
- தனது அணியினரைக் கௌரவிக்கும் முகமாக அந்நாட்டு அரசு தனது வீரர்களுக்கென சிறப்பு விமானத்தையும், விமானத்தின் வெளிப்புறத்தில் அணியின் சீருடை நிறத்தில் வர்ணமும், வீரர்களின் உருவப் படங்களும் அந்த விமானத்தில் பொறிக்கப்பட்டன. அந்த அணி எது?
  **ஆர்ஜென்டினா அணி**
- 20 ஆவது உலகக் கிண்ண கால்பந்து போட்டியில் முதல் நாள் ஆரம்பத்தில் விளையாடிய அணிகள் எது?
  பிரேசில் - குரோஷியா
- உலகக் கிண்ணத்தில் பிரேசில் சம்பியன் ரொனால்டோவின் உலகக் கிண்ண கோல் சாதனையை சமன் செய்த வீரர் யார்?
  ஸ்டார் மிரஸ்லோவ் குளோவ் (ஜேர்மனி, 15 கோல்)
- உலகக் கிண்ணத்தில் மோசமான தோல்விகளைத் தழுவிக்கொண்டதால் எந்த நாட்டின் அமைச்சர் அதிரடியாக பதவி நீக்கம் செய்யப்பட்டார்?
  கானா நாட்டு விளையாட்டுத்துறை அமைச்சர்

விருதுகள் :

- 'பெயார் பிளே' -
  விளையாட்டுக் கோட்பாடுகளை ஒழுங்காகப் பின்பற்றி அடக்க ஒடுக்கமாக வளையாடும் அணிக்கு இவ்விருது வழங்கப்படுகிறது.
- தங்கக் காலணி - அதிக கோல்கள் அடிக்கும் வீரருக்கான விருது
- தங்க கையுறை - சிறந்த கீப்பருக்கு வழங்கப்படும் விருது

## ❐ "உலக இளைஞர் மாநாடு" (World Conference on Youth 2014)

- ஆசியாவில் முதல் தடவையாக இலங்கையில் நடைபெறும் 15 ஆவது உலக இளைஞர் மாநாடு இதுவாகும்.
- உலகின் முதலாவது இளைஞர் மாநாடு 1936இல் ஜெனிவாவில் நடைபெற்றது.
- ஆசிய நாடுகளில் இந்த மாநாட்டை நடத்த வேண்டுமென 2010

மெக்ஸிக்கோவில் நடைபெற்ற மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

- 14ஆவது உலக இளைஞர் மாநாடு அமெரிக்காவில் நடைபெற்றது.
- அம்பாந்தோட்டை மாகம் றுஹுணுபுர சர்வதேச பேரவை மாநாட்டில் ஆரம்பமாகியது.
- 168 நாடுகளின் பிரதிநிதிகள் பங்கேற்பு.
- இந்த மாநாட்டில் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனின் விசேட பிரதிநிதியாக அஹமட் அல் ஹெந்தாவி கலந்து கொண்டார்.
- தொனிப்பொருள் : **“2015 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தில் இளைஞர்களைத் தயார்ப்படுத்தல்”** என்பதாகும்.
- இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் - டலஸ் அழகப்பெரும
- 62 சதவீதமான இளைஞர் ஆசிய வலயத்தில் வாழ்கின்றனர். 17 சதவீதமானோரே ஆபிரிக்க கண்டத்தில் வாழ்கின்றனர்.
- உலகில் இளைஞர் தொகை 960 மில்லியனாகும்.

## ஜி–77 அரச தலைவர்கள் மாநாடு

- பொலிவியாவில் சாந்தாகுரூஸ் நகரில் 14.06.2014 இல் நடைபெற்றது.
- தொனிப்பொருள் :
  ‘ஜி-77 மாநாடு நல்வாழ்க்கைக்கான புதிய உலக முறை”

மேற்படி அமைப்பு ஐக்கிய நாடுகளில் அங்கத்துவம் வகிக்கின்ற அபிவிருத்தி அடையும் நாடுகளின் கூட்டமைப்பாகும். அது அங்கத்துவ நாடுகளின் கூட்டுப்பொருளாதார அபிலாஷைகளை மேம்படுத்துதல். ஐக்கிய நாடுகளின் முறைக்குள் அனைத்து பிரதான சர்வதேச பொருளாதார விடயங்கள் தொடர்பான பேச்சுவார்த்தைகளின் போது ஒருங்கிணைந்த நிலைப்பாட்டில் இருந்து செயலாற்றுதல் மற்றும் அபிவிருத்தியின் பொருட்டு இதற்கு ஒத்துழைப்பு வழங்கி மேம்படுத்துதல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

Valai வலை சமகால பொது அறிவுத் தொகுப்பு

**சந்தா விபரம் - Delivered to Your Home**

உங்கள் சந்தா தொகையை சி.என்.எச்.சாள்ஸ் என்ற பெயரில் யாழ். பிரதம தபாலகத்தில் மாற்றக் கூடியதாக காசுக் கட்டளை (Money Order) அனுப்பப் படுதல் வேண்டும். அல்லது உங்கள் பகுதியில் உள்ள கொமர்ஷல் வங்கியில் C.N.H. Charles, Commercial Bank (Stanley Road,Jaffna) 8127011186 என்ற சேமிப்புக் கணக்கில் வைப்புச் செய்து வங்கி ரசீதுடன் உங்கள் முழுப் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் என்பன அடங்கிய விண்ணப்பத்தினை எனது முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அத்துடன் எத்தனையாவது இழையிலிருந்து அனுப்ப வேண்டும் என்பதையும் குறிப்பிடுங்கள். இதழின் பிரதிகள் கண்ணியமாக உங்களுக்குத் தபாலில் அனுப்பி வைக்கப்படும்.



**50/– விலைக் கழிவுடன் வருடச் சந்தா 250/– மட்டுமே.**

## ❒ 'கால்வாய்' நோய்

கால்வாய் நோயானது தீவிரமானதும், விரைவாகப் பரவக்கூடியதுமான ஒரு வைரஸ் நோயாகும். உலகின் பெரும்பாலான நாடுகளில் இந்த நோய்த் தாக்கம் காணப்படுகின்றது.

இந்த வைரஸ்ஸானது பசுக்கள், பன்றிகள், ஆடுகள், செம்மறி ஆடுகள் மற்றும் மான்கள் போன்ற பிளவுபட்ட குளம்புகளைக் கொண்ட மிருகங்களில் அதிகளவான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது.

பொதுவாக இந்நோய்த் தாக்கத்துக்கு உள்ளான விலங்குகளின் வாய் மற்றும் வாயைச் சூழவுள்ள பகுதிகள், நாக்கு, பால் மடி, கால்பாத குளம்புகளைச் சூழவுள்ள பகுதிகளில் கொப்புளங்கள் காணப்படும். மற்றும் வாயிலிருந்து நுரை போன்ற உமிழ்நீர் தொடர்ச்சியாக வெளியேறிக் கொண்டிருக்கும். அத்துடன் நடக்கவும், எழுந்து நிற்கவும் முடியாமல் அவதியுறும்.

இந்த நோயினால் இறப்பு என்பது குறைவாக இருந்தாலும் கால் நடைகளின் உற்பத்தியில் பாரியளவு வீழ்ச்சி ஏற்படுகின்றது. இதனால் கால்நடைப் பண்ணையாளர்கள் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

## ❒ "சீனா விஷன் 2050"

கண்டுபிடிப்புக்களுக்குப் பெயர் பெற்ற சீனா தனது நாட்டுக் குழந்தைகளின் ஆரோக்கியத்துக்காக கொண்டு வந்துள்ள திட்டமே 'சீனா விஷன் 2050' என்ற தொலைநோக்குத் திட்டமாகும்.

இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக 2010 ஆம் ஆண்டிலிருந்து பிறந்த குழந்தைகளை ஆரோக்கியத்திலும், கல்வியிலும் சிறந்தவர்களாக வளர்ப்பதற்கு நுணுக்கமான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது.

அதில் ஒன்று குழந்தைகள் சரியான தூரத்தில் வைத்துப் படிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள கருவியாகும். இந்தக் கருவியின் உதவியுடன் படிக்கும் குழந்தைகளுக்கு கண் பார்வை தொடர்பான பிரச்சினைகள் ஏற்பட மாட்டாதெனக் கூறப்படுகிறது.

இவ்வாறு படிக்கும் குழந்தைகள் 20 வயதினை அடையும் போது கண் பார்வைக் குறைபாடு இல்லாத இளைய சமுதாயத்தைச் சீனா பெற்றிருக்கும். வருங்கால சந்ததியினரை மனதில் வைத்து இதுபோன்ற பல திட்டங்களைச் சீனா செயற்படுத்தவுள்ளது.

---

**உங்கள் பார்வையில் வலை...**

உங்களது கருத்துக்களை எழுதி, Passport அளவு புகைப்படத்தினையும் இணைத்து அனுப்புங்கள். அவை காலக்கிரமத்தில் வலையில் பிரசுரிக்கப்படும்.

## ❒ “வன் வேல்ட்” (One World) பூகோள விமான சேவை

இலங்கை விமான சேவை வன் வேர்ல்ட் பூகோள விமான சேவையுடன் உத்தியோகபூர்வமாகக் கடந்த 30.04.2014 ஆம் திகதி இணைந்து கொண்டது.

இது தொடர்பான உத்தியோகபூர்வ நிகழ்வு மத்தள ராஜபக்ஷ விமான நிலையத்தில் நடைபெற்றது.

அடிக்கடி விமானப் பயணங்களை மேற்கொள்ளும் பயணிகளுக்காக உயர்தர விமான சேவையினை வழங்கும் பொருட்டு உலகின் முதற்தர விமான சேவைகளின் இணைப்பான ‘வன் வேர்ல்ட்டுடன்’ 15 ஆவது நாடாக ஸ்ரீலங்கன் விமான சேவை இணைந்து கொண்டுள்ளது.

2014 மே 1 முதல் ஸ்ரீலங்கன் விமானங்களும் வன் வேர்ல்ட் சின்னம் பொறிக்கப்பட்டு சேவையில் ஈடுபடவுள்ளன.

இந்த வன் வேர்ல்ட் குழுமத்தில் 180 மில்லியன் பேர் இணைந்துள்ளனர். வன் வேர்ல்ட் அங்கத்தவர்களுக்கு விமான ஆசனம் ஒதுக்குவதில் முன்னுரிமை அளிக்கப்படுவதோடு? இரட்டிப்பான பயண சலுகைகளும் கிடைக்க இருப்பது குறிப்பிடத்தக்கது.

வன் வேர்ல்ட் குழுமத்தில் பின்வரும் நாடுகளின் விமான சேவைகள் இணைந்துள்ளன.

ஜப்பான். மலேசியா, அவுஸ்ரேலியா, குவன்டாஸ், ஏயார் பர்லின், பிரித்தானிய ஃபின் எயார், ஐவேரியா, ரஷ்யா, எஸ்7, கட்டார், ரோயல் ஜோர்டானியன், அமெரிக்க யு.எஸ்.எயார்வேஸ், எல்.ஏ.என், ரீ.ஒ.எம், விமான சேவை மற்றும் இலங்கை ஆகும்.

இந்திய உப கண்டத்தில் முதலாவது சர்வதேச விமான சேவையாக ஸ்ரீலங்கன் விமான சேவை வன் வேர்ல்ட் குழுமத்துடன் கை கோர்க்கிறது. இதனூடாக பல சலுகைகள், வசதிகள் கடைக்கவுள்ளதோடு, பல சர்வதேச விமான சேவையுடன் இணைந்து செயற்படும் வாய்ப்பும் கிடைக்கவுள்ளது.

வன் வேர்ல்ட் குழுமத்தில் அங்கத்துவம் வகிக்கும் விமான சேவைகள் ஒன்றிணைந்து 150 நாடுகளில் ஆயிரத்துக்கும் அதிகமான விமான நிலையங்களின் ஊடாகத் தினமும் 14 ஆயிரத்து 250 விமான சேவைகளை நடத்துகின்றமை குறிப்பிடத்தக்கது.

## வேலைவாய்ப்பு படிவங்கள்

அரச வர்த்தமானியில் வெளிவருகின்ற அனைத்து வேலைவாய்ப்புப் படிவங்களும் என்னால் வெளியிடப்பட்டு வருகின்றன. அதனை யாழ்.,நல்லூர் பூபாலசிங்கம் புத்தகசாலை உட்பட குடாநாட்டின் முன்னணி புத்தக நிலையங்களில் மட்டும் பெற்றுக்கொள்ள முடியும்.

வாழ்க வையகம் - வாழ்க வளமுடன்

தொடர்புக்கு : சி.என்.எச்.சாள்ஸ், 163 செம்மணி வீதி, நல்லூர். தொ.இல : 0776913337
heyncharles@gmail.com